திரு. வி. சங்கரன் : மதுரை-ராமனாதபுரம் மாவட்டங்களுக்காக நீதிமன்றங்களை எந்த இடத்திலே கட்டுவது என்று தீர்மானிக்கப் பட்டு இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சொக்கி குளத்தில் இடம் இருப் பதாகச் சொல்லுகிறார்கள். அதையெல்லாம் இனிமேல் பரிசிலனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

Maternity and Child Welfare Centres

* 794 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the number of Maternity and Child Welfare Centres in the State;

(*b*) whether there are any such centres in Bhavani taluk; and

(*c*) if not, whether there is any proposal to set up such centres there?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) 1945.

(*b*) Yes, Sir; there are 10.

(*c*) Does not arise.

அஸ்ஸாமிற்கு அனுப்பப்பட்ட போலீஸ் அதிகாரிகள்

* *795* **கேள்வி.**—*திரு. முனு ஆதி : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) நாகர் கலகக்காரர்களை அடக்குவதற்காக அஸ்ஸாமிற்கு நம் மாநிலத்திலிருந்து எத்தனை போலீஸ் அதிகாரிகள், போலீஸ் காரர்கள் அனுப்பப்பட்டுள்ளனர் ?

(இ) இவர்கள் திரும்ப வரவழைக்கப்பட்டுவிட்டனரா அல்லது இன்னமும் அங்குதான் இருக்கிறார்களா ?

(உ) எத்தனை ஆண்டுகாலமாக இருக்கிறார்கள் ?

(எ) இவர்களின் பராமரிப்புக்காக கிடைத்த மத்திய அரசாங்கத் தொகை ஆண்டொன்றுக்கு எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Five active Companies of the Malabar Special Police (Madras Battalion) consisting of four Gazetted Officers, 29 Junior Officers and 952 other ranks were deputed for duty in Assam.

(*b*) They have been repatriated to this State on 1st May 1961.

(*c*) The Companies left Madras for Assam on 24th May 1957 and after serving in Assam for nearly four years, returned to Madras State on 1st May 1961.

(*d*) The entire expenditure on the battalion, viz., pay and allowances together with the deputation allowance, travelling allowances and the contingencies was met by the Government of

30th July 1962]

Assam or Government of India during the period of deputation of Battalion. The year-wise particulars of amounts reimbursed are furnished below.:—

		RS.
1957–58	... ...	12,85,700
1958–59	... ...	15,30,800
1959–60	... ...	13,55,657
1960–61	... ...	14,14,356
1961–62	... ...	1,36,876

Elections to Panchayats and Panchayat Union Councils

* 796 *Q.*—SRI G. RAJARAM: Will the Hon. the Chief Minister be pleased to state when the elections to Panchayat Boards and Councils are likely to be conducted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The question of fixing the dates for the next ordinary elections to all panchayats is under the consideration of the Government. The question of fixing the dates of the next election of members to Panchayat Union Councils will be considered in that connection.

திரு. ஜி. ராஜாராம்: நடைமுறையில் இருக்கின்ற தேர்தல் முறையிலே ஏதாவது மாறுதல்கள் செய்ய அரசாங்கத்துக்கு எண்ணம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது அத்தகைய உத்தேசம் ஒன்றுமில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும், வெவ்வேறு கால கட்டத்தில் அமைக்கப் படுகின்றன. ஒவ்வொன்றிற்கும் ஐந்தாண்டு காலம் பூர்த்தியாகி விட்டாலும், வேறு கால கட்டத்தில்தான் தேர்தல் வரும். இவற்றையெல்லாம் முறைப்படுத்தி ஒரே வருடத்தில் பஞ்சாயத்து களுக்கும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கும் தேர்தலை நிர்ணயிக்க சர்க்கார் வழிவகை செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் இதுபற்றி விவரம் கொடுத்திருக்கிறேன். ஒரு ஆண்டுக்குள்ளாகவே வெவ்வேறு தேதியாக இருக்கிறது. எல்லாவற்றையும் ஒரே தேதியில் வைத்துக் கொள்ளலாம் என்றால், அது பரிசிலனை செய்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

ஸ்ரீ. ஏ. ராகவ ரெட்டி: ஏற்கெனவே ஐந்து வருடங்கள் முடிவடைந்த பஞ்சாயத்துகளுக்கு எப்பொழுது தேர்தல் நடைபெறும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எல்லா விஷயங்களும் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கின்றன.